1986 மே 2]

இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சேலம் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப் பட்டிருக்கிறது. அதனுடைய நிலை யாது?, அப்படி பிரிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய தேர்தலுக்கு முன்பு சில ஊராட்சி ஒன்றியங்களை பிரிக்கலாம் என்ற யோசனை சொல்லப்பட்டது. அதிலே ஓமலூர் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்புகள்

(அ) இலங்கைக்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலுள்ள மணல் திட்டில் கடத்தல்காரர்கள் சிலர் சுட்டுக் கொல்லப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்கு பதிலாக திரு. தி. அன்பழகன் அவர்கள் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனுஷ்கோடி அருகேயுள்ள 6-வது மணல்திட்டு என்ற இடத்தில் சமீபத்தில் இலங்கைப் படையினரால் தமிழ் நாட்டைச் சேர்ந்த 6 பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 மே 2

அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கஞ்சிரங்குளத்தைச் சேர்ந்தவரும், தற்போது இராமேஸ்வரத்தில் இருப்பவருமான வெள்ளையத் தேவர் என்பவரின் மகனான தங்கவேலு (வயது 40) என்பவர், 24—3—1986 அன்று சுமார் பிற்பகல் 3-00 மணிக்கு இடுப்பிலும், கையிலும் குண்டுக் காயங்களோடு இராமேஸ்வரம் காவல் நிலையத்திற்கு வந்தார். 23—3—1986 அன்று சுமார் மாலை 6·30 மணிக்கு அவரும் மற்றும் 8 நபர்களும் 15 வி. சி. ஆர்களையும், 150 விடியோ காஸெட்டுகளையும் இலங்கையிலிருந்து கொண்டு வந்து தனுஷ்கோடிக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள 6-வது மணல் திட்டில் தங்கினர். தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் மணல் திட்டுக்கள் பல காணப்படுகின்றன. இந்த திட்டுக்களில் 6-வது மணல் திட்டுதான் இது. அப்போது 22 நபர்கள் அங்கு ஒரு படகில் வந்து இறங்கியதாகவும், அவர்களில் சிலர் அங்கிருந்த மேற்படி 9 பேர்கள் மீது சரமாரியாகச் சுட்டார்கள் என்றும் கூறி, ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். அவாது கூட்டாளிகள் 8 பேரும் மரணமுற்றனர் என்றும், அவர் மட்டும் மயக்கமுற்று விழுந்து விட்டார் என்றும், குற்றவாளிகள் அவர்களின் சொத்துக்களையும் படகையும் எடுத்துச் சென்று விட்டனர் என்றும், மீனவர்கள் சிலரால் காப்பாற்றப்பட்டு அவர் கரைக்குக் கொண்டு வரப்பட்டார் என்றும் கூறினார். இராமேஸ்வரம் காவல் ஆய்வாளர், இராமேஸ்வரம் காவல் நிலையக் குற்ற எண். 129/86, இ.த.ச. பிரிவு 302 மற்றும் 307-ல் வழக்குப் பதிவு செய்தார். காயமடைந்த தங்கவேலு இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(2) காவல் துறையினரும், வருவாய்த் துறை அதிகாரிகளும் சம்பவம் நடந்த அன்று, அவ்விடத்திற்குச் சென்று, கடற்கரைப் பாதுகாப்புக் கப்பல் ஒன்றில் சென்று பார்வையிட்டனர். அங்கு 6 சடலங்கள் கிடந்தன. மீதமுள்ள 2 சடலங்கள் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது. வெடித்த .303 தோட்டாக்கள் மூன்றும், 9 எம்.எம். வெடிக்காத தோட்டா ஒன்றும் அவ்விடத்தில் காணப்பட்டன. அந்த 6

1986 மே 2] [திரு. ஆர். எம். வீரப்பன்]

சடலங்களும் பிரேத விசாரணைக்காக தனுஷ்கோடிக்குக் கொண்டு வரப்பட்டன. அந்தச் சடலங்களின் விவரம் கீழே வருமாறு:—

(1) ஜானுான் (30 வயது), எருக்கலாம்பட்டி.

(2) ரத்தின சிங் (32 வயது), தந்தை பெயர் கந்தையா, யாழ்ப்பாணம்.

(3) குமார் என்கிற அஜீஸ் (30 வயது), எருக்கலாம்பட்டி.

(4) சீனி (32 வயது), தந்தை பெயர் முஸ்தபா, எருக்கலாம் பட்டி.

(5) சுப்பிரமணியம் (32 வயது), தந்தை பெயர் ஆறுமுகம், வடக்கஞ்சேரி, கிளிநொச்சி.

(6) அலீம் (21 வயது), தந்தை பெயர் காசிம், எருக்கலாம் பட்டி. இவர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். கண்டு பிடிக்க முடியாத இரு சடலங்கள் யாருடையது என்று நிர்ணயிக் கப்படவில்லை. இறந்துபோன 8 பேர்களும் காயம்பட்ட தங்க வேலுவும் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்று தெரிகிறது.

(3) இது சம்பந்தமாக, விக்டர், தந்தை பெயர் தொம்மையா, தலைமன்னார், (2) பிரான்சிஸ் என்கிற கட்டையன், தலை மன்னார், (3) பாஸ்கரன், (4) செல்லக்கிளி, ஆகிய நால்வரும் கைது செய்யப்பட்டனர். இந்த நால்வரும் இலங்கைத் தமிழர்கள். மேலும், இது தொடர்பாக, கீழ்க்கண்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன :—

(1) 11 வி.சி.ஆர். டெக்.

(2) 85 வீடியோ கேசட்டுகள்.

(3) 950 ஜிப்புகள்.

(4) ஒரு பச்சை நிற பிளாஸ்டிக் படகு.

(5) 40 எச். பி. படகு மோட்டார் — ஒன்று.

(6) 55 எச்.பி. படகு மோட்டார் — 2.

(7) .303 துப்பாக்கிகள்—2.

(8) 9 எம்.எம். இயந்திரத் துப்பாக்கி—1.

(9) எஸ்.எல்.ஆர். துப்பாக்கி—1.

(10) 9 எம்.எம். இயந்திரத் துப்பாக்கி ரவுண்டுகள் — 42.

(11) எஸ்.எல்.ஆர். துப்பாக்கி ரவுண்டுகள்—34.

(12) கார்பைன் மேக்சைன் — 3.

(13) ·303 துப்பாக்கி ரவுண்டுகள்—36.

இந்த வழக்கின் மேல் விசாரணையை புலனாய்வுத்துறை மேற்கொண்டுள்ளது.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம் அகரமணக்கால் தேசிய ஆரம்பப்பள்ளி சத்துணவு மையத்தில் உணவு உண்ட மாணவர்கள் பாதிக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, கோ. வீரய்யன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி, அகரமணக்கால் என்ற இடத்திலுள்ள ஒரு பள்ளியில் சத்துணவுக் கூடத்தில் உணவு உட்கொண்ட சுமார் 35 மாணவர்கள் பாதிக்கப்பட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரம், அகரமணக்கால் தேசிய ஆரம்பப்பள்ளி சத்துணவு மையத்தில் 17—4—1986 அன்று 145 மாணவர்கள் உணவு உட்கொண்டனர். குமார் என்ற மாணவன் வாந்தி எடுத்ததை அடுத்து அவனுக்கு தனியார் மருத்துவமனையில் உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்பு, 37 மாணவர்கள் வாந்தி எடுத்தனர், அவர்கள்